**சுருக்கம்**

பொங்கல் கருணைத் தொகை – ஊராட்சிகளில் பணியாற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் / விசைப் பம்பு இயக்குபவர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2008–09ஆம் ஆண்டுக்கு பொங்கல் கருணைத் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை

அரசாணை (2டி) எண். 01 நாள்: 11.01.2010

படிக்கப்பட்டது

1. அரசாணை (2டி) எண். 2, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12.1.2009.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் நேர்முக கடித எண். 244/2010/பஅ1, நாள் 4.1.2010.

----

**ஆணை:**

படிக்கப்பட்ட ஒன்றிலுள்ள அரசாணையில் ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் / விசை பம்பு இயக்குபவர்கள், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2007–08ஆம் ஆண்டுக்கான பொங்கல் கருணைத் தொகையாக ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்கப்பட்டது.

2. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் / விசை பம்பு இயக்குபவர்கள், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்கள் ஆகிய ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சென்ற முறை வழங்கப்பட்டது போல் இந்த ஆண்டும் பொங்கல் கருணைத் தொகை வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்தது.

3. ஊராட்சிகளில் 2007–08ஆம் ஆண்டில் 240 நாட்கள் மற்றும் அதற்கு மேலாக பணிபுரிந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் / விசைப்பம்பு இயக்குபவர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 2008–09ஆம் ஆண்டு பொங்கல் கருணைத் தொகையாக ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) சம்மந்தப்பட்ட ஊராட்சி நிதியிலிருந்து வழங்க அனுமதித்து அரசு ஆணையிடுகின்றது.

4. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 68/FS/P/2010, நாள் 09.01.2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை– 15
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், (சென்னை நீங்கலாக)
மாநில கணக்காயர், சென்னை– 18/35
மாநில கணக்காயர், சென்னை – 18/35 (பெயரிடப்பட்ட கடித உறையில்)
கருவூலக் கணக்குத் துறைத் தலைவர், சென்னை–15
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.

**நகல்**

துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதி (ஊ.வ) துறை, சென்னை – 9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்